

ஓசூரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்ட அலுவலகத்தில் மேற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான பிரகாஷ் தலைமையில் கலைஞரின் திரு உருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ், துணை மேயர் ஆனந்தய்யா, மாதேஸ்வரன், தொ.மு.ச. கோபாலகிருஷ்ணன், மாநகர அவை தலைவர் செந்தில்குமார், மாணவரணி கண்ணன், சென்னீரப்பா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மாநகராட்சி கவுன்சிலர்கள் உள்ளிட்ட கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.



முத்தமிழ்றிஞர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாநகர கழகத்தின் சார்பில், போயம்பாளையம் சரண் மருத்துவமனை அருகில் அமைந்துள்ள திருப்பூர் வடக்கு மாநகர கழக அலுவலகம் முன்பு அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மாநகர கழக பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாநகர துணைச் செயலாளர்கள் ராமசாமி, தேவி முருகேஷ், செங்குட்டுவன் உள்பட மாநில, மாநகர நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### “அறிவிப்புகள் அதிகம்... செயல்படுத்தும் திட்டம் இல்லை” -

# தமிழக பட்ஜெட் மக்கள் எதிர்பார்ப்பை முழுமையாக பூர்த்தி செய்யவில்லை!

## சு.கல்யாணசுந்தரம் எம்.பி. கடும் விமர்சனம்!

புதுடெல்லி, ஆக. 10 -

தமிழக அரசின் 2026-27 பொது பட்ஜெட் மற்றும் வேளாண் பட்ஜெட் குறித்து கடும் கண்டனத்தை தெரிவித்து சு.கல்யாணசுந்தரம் எம்.பி அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு தமிழக அரசின் 2026-27 பொது பட்ஜெட் மற்றும் வேளாண் பட்ஜெட் குறித்து எதிர்க்கட்சிகள் கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளன. மக்களின் அன்றாட வாழ்வாதாரம், விவசாயம், வேலை வாய்ப்பு, நீர்வள மேலாண்மை, சுகாதாரம் மற்றும் உள்ளாட்சி ஜனநாயகத்தை வலுப்படுத்தும் புதிய தொலைநோக்கு திட்டங்கள் இல்லாமல், அறிவிப்புகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன.

எதிர்க்கட்சிகளின் கருத்துப்படி, முந்தைய அரசின் பல மக்கள் நலத் திட்டங்கள் பெயர் மாற்றத்துடன் மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளன. புதிய திட்டங்கள் மிகக் குறைவாக இருப்பதோடு, அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கு செயல்படுத்தும் காலக்கெடு, மாவட்ட வாரியான செயல் திட்டம் மற்றும் போதுமான நிதி ஒதுக்கீடு குறித்த தெளிவான விளக்கமும் இல்லை என்று கூறப்படுகிறது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் முன்னோடியாக திகழ வேண்டிய தமிழகத்தில், வீட்டு மேற்கூரை சூரிய மின்சாரம், விவசாய சோலார் பம்புகள், அரசு அலுவலகங்களில் சூரிய மின்சார பயன்பாடு போன்றவற்றை விரிவுபடுத்தும் வலுவான கொள்கை அறிவிப்புகள் இடம்பெறவில்லை.

மழைநீர் சேகரிப்பு, ஏரி-குளங்கள் புனரமைப்பு, நிலத்தடி நீர் பாதுகாப்பு மற்றும் நீர்வள மேலாண்மைக்கான மாநில அளவிலான புதிய திட்டங்கள் இல்லாதது எதிர்கால நீர் பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல்கள் குறித்து பட்ஜெட்டில் எந்த விதமான தெளிவான அறிவிப்போ அல்லது காலக்கெடுவோ இடம்பெறாதது ஜனநாயக நடைமுறைகள் குறித்து கேள்விகளை எழுப்பும் வகையில் உள்ளது.

‘தாய்மாமன்’ திட்டத்தின் கீழ் தங்க மோதிரம் வழங்கும் அறிவிப்பினால், அரசு மருத்துவமனைகளில் அதிகரித்து வரும் பிரசவங்களுக்கு ஏற்ப மகப்பேறு மருத்துவர்கள், குழந்தைகள் நல மருத்துவர்கள், செவிலியர்கள், படுக்கைகள், மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் போதுமான அளவில் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. தாய்-சேய் நலனுக்கான மருத்துவக் கட்டமைப்பை வலுப்படுத்தாமல் வெறும் பரிசுத் திட்டங்கள் மட்டும் போதாது அதற்குரிய வசதிகளையும் இந்த அரசு ஏற்படுத்த வேண்டும்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள ஆறுகள், வாய்க்கால்கள், ஏரிகள் மற்றும் குளங்களில் தேங்கியுள்ள வண்டல் மண்ணை விவசாயிகள் தங்கள் பயன்பாட்டிற்கு 1 அடி வரை தங்களது சொந்த செலவில் அகற்றி கொள்ள அனுமதி அளித்தால், அரசுக்கு வருமான இழப்பு ஏற்படாது. நிலத்தடி நீரும் உயரும்.

வேளாண் பட்ஜெட்டிலும் டெல்டா விவசாயிகளுக்கான வறட்சி நிவாரணம், நெல் கொள்முதல் விலை உயர்வு, பாசன மேம்பாடு, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கான கடன் சலுகைகள் போன்ற முக்கிய கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு அளிக்கப்படவில்லை.

காவிரி டெல்டா மாவட்டங்களில் விளையும் நெற்பயிர்களை மழைக்காலங்களில் சேமித்திட கூடுதலாக சேமிப்புக்கிடங்குகள் ஏற்படுத்தாததால் நெற்பயிர்கள் சேதமடைந்து உணவு பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளது. இந்த பட்ஜெட்டில் நெல் சேமிப்பு கிடங்குகள் அமைப்பதற்கான எந்தவிதமான அறிவிப்பும் இல்லாததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

மேலும், ஏழை பெண்களுக்கு இலவச ஆடுகள் வழங்கும் திட்டம் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டிருந்தாலும், அதை மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்துவதற்கான நிர்வாக வழிகாட்டுதல்கள், பயனாளிகள் தேர்வு முறை, நிதி ஒதுக்கீடு, மாவட்ட வாரியான இலக்கு மற்றும் செயல்படுத்தும் கால அட்டவணை குறித்து தெளிவான விளக்கம் இல்லை. இதனால், இந்தத் திட்டம் நடைமுறையில் முழுமையாக செயல்படுத்தப்படுமா என்ற சந்தேகம் எழுகிறது. வெறும் அறிவிப்பாக மட்டுமே முடிவடையாமல், வெளிப்படையான செயல்திட்டத்துடன் அரசு செயல்பட வேண்டும்.

“பட்ஜெட்டில் அறிவிப்புகளை வெளியிடுவது மட்டும் போதாது; ஒவ்வொரு திட்டமும் மக்களை சென்றடையும் வகையில் நிதி, காலக்கெடு, நிர்வாகப் பொறுப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்புடன் செயல்படுத்தப்பட வேண்டும். இல்லையெனில் இந்த பட்ஜெட் அறிவிப்புகளின் தொகுப்பாக மட்டுமே இருந்து விடும்”

இவ்வாறு மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது!

# பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில்!

பெரம்பலூர், ஆக.10 -

தஞ்சாவூரில் ந நடைபெற்ற விவசாயிகள் ஆர்ப்பாட்டம் தொடர்பாக, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் மீது பெண்கள் க காவல்துறையினர் 6 பிரிவுகளின் கீழ் பொய்யான வழக்குப்பதிவு செய்து, அவரை கைது செய்துள்ளனர். இந்த கைது நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து பெரம்பலூர் மாவட்ட தி.முக சார்பில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில், தமிழக முதலமைச்சர் விஜய் தலைமையிலான தவெக அரசு, எதிர்க்கட்சிகளை பழிவாங்கும் அரசியலை செய்வதை கண்டித்தும், காவல்துறையினரின் அராஜகத்தை கண்டித்தும் பாலக்கரை , புதிய பேருந்து நிலையம் வரை பேரணியாக சென்று, கண்டன முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட திமுகவினரை காவல்துறையினர் கைது செய்து தனியார் மண்டபத்தில் அடைத்து வைத்துள்ளனர்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,சன். சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரி பாஸ்கர், ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.ராஜ்குமார், சி.ராஜேந்திரன், செ.நல்ல தம்பி,டாக்டர் செ.வல்லபன்,அழகு.நீலமேகம்

உள்ளிட்ட ஏராளமான தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.

# முத்தமிழறிஞர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவு நாள்!

## நாமக்கல்லில் அமைதிப் பேரணி!

நாமக்கல், ஆக . 10 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8வது ஆண்டு நினைவு நாளையொட்டி, நாமக்கல்லில் அமைதிப் பேரணி நடைபெற்றது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள அண்ணா சிலையில் இருந்து அமைதிப் பேரணி தொடங்கியது. அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமையில் நடைபெற்ற இந்த பேரணி, பரமத்தி சாலையில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சிலை வரை சென்றனர்.

பின்னர், கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயர் செ.பூபதி, நகர செயலாளர்கள் இராணா ஆர்.ஆனந்த், அ. சிவக்குமார், ஒன்றிய செயலாளர் வி.கே.பழனிவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பகுதி, வார்டு மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், மக்கள் பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

மேலும், நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து ஒன்றிய, நகர, பேரூர், வார்டு மற்றும் கிளைக் கழகங்களிலும் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி, நினைவு நாளை கடைப்பிடிக்கப்பட்டது.

### நாமக்கல் மேற்கு மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு தினம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி தலைமையில் மலர் அஞ்சலி!

நாமக்கல், ஆக. 10 -

நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி கிழக்கு, மேற்கு நகர திமுக சார்பில் மௌன அஞ்சலி ஊர்வலம் நடைபெற்றது.

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், பரமத்தி தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ். மூர்த்தி தலைமையில் திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் உருவப்படத்திற்கு நாமக்கல் மேற்கு மாவட்டப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி உள்ளிட்ட திமுகவினர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து அண்ணா சிலை அருகிலிருந்து நகராட்சி வளாகம் வரை மௌன ஊர்வலம் நடைபெற்றது. நகராட்சி வளாகம் அருகே நகர்மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சார்பில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞரின் உருவப்படத்திற்கும் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் மேற்கு நகர திமுக செயலாளரும் முன்னாள் நகர்மன்ற தலைவருமான ஆர்.நடேசன், கிழக்கு நகர திமுக செயலாளரும் நகர்மன்ற துணைத்தலைவருமான தா.கார்த்திகேயன், ஒன்றிய செயலாளர்கள் வட்டூர் தங்கவேல், தாமரைச்செல்வன், அருண், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் சுரேஷ்பாபு, நகர்மன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு, நகர்மன்ற உறுப்பினர்கள், மற்றும் இளைஞரணி, மகளிரணி உள்ளிட்ட 100 க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இதேபோல் பரமத்தி வேலூரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாமக்கல் மேற்கு மாவட்டப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி தலைமையில் பேரூர் செயலாளர் முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.



தமிழக எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைதை கண்டித்து புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலையில் விராலிமலை மேற்கு ஒன்றியச் செயலாளர் அ.இளங்குமரன் தலைமையில் விராலிமலையில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. நிகழ்வில் ஒன்றியச் செயலாளர்கள் தென்னலூர் எம்.பழனியப்பன், கே.பி.அய்யப்பன் மற்றும் சிவா, மெடிக்கல் குமார், சண்முகசுந்தரம், ஐஸ் கணேசன், தேன்கனிப்பட்டி ராஜா மற்றும் பலர் பங்கேற்றனர்.

# மாதவரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவு நாள்!

மாதவரம், ஆக.10 –

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 23 (அ) வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாள் காவாங்கரை வட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

23 (அ) வட்டச் செயலாளர் வி .ஆர்.குப்பன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். கூடியிருந்த நிர்வாகி களும், பொதுமக்களும் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் புகழ் ஓங்குக என கோஷங்கள் எழுப்பி நினைவு நாளை அனுசரித்தனர்.

நிகழ்ச்சியில் வட்ட அவைத் தலைவர் அ.ராமச்சந்திரன், வட்ட துணைச் செயலாளர் எம்.உசேன் மொய்தீன், பகுதி பிரதிநிதி அ.அப்துல் சமது, வி.ஆர்.கே. ஜவகர், பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் ஆர்.ஜெயபாரதி, சடையங்குப்பம் பர்மா நகர் தினேஷ், சங்கர், எஸ்.சரவணன் உள்ளிட்ட நிர்வாகி கள் பலர் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.



நவீன தமிழகத்தின் சிற்பி,செம்மொழி கண்ட நாயகர் டாக்டர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு பெரிய நெகமம் பேரூர் கழக செயலாளர் ராசு (ஏ) முத்துக்குமார் தலைமையில் கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் திரு.கே.வி. கே.எஸ்.சபரி கார்த்திகேயன் நெகமம் பழைய பேருந்து நிலையத்தில் கலைஞரின் திரு உருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி 100 நபர்களுக்கு காலை உணவு வழங்கினர். உடன் பேரூர் கழக துணை செயலாளர்கள், வார்டு செயலாளர்கள், வார்டு கவுன்சிலர்கள், பாக முகவர்கள் இளைஞர் அணி தம்பிமார்கள் உடன் இருந்தனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்டம் ராசிபுரம் 23வது வார்டு பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி, நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் எம்.கார்த்திக் தலைமையில், அவரது திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, அப்பகுதியைச் சேர்ந்த 200 பேருக்கு காலை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் ராஜேஷ்பாபு, மாநில கல்வியாளர் அணி துணை செயலாளர் சுதா ஜெயக்குமார், தொண்டரணி துணை அமைப்பாளர் பாண்டியன், நகர் இளைஞர் அணி துணை அமைப்பாளர் சிவப்பிரகாசம் ஆகியோர் கலந்து கொண்டனர்.